கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 38/2017**

திரு. உதயகுமார் (D.W –4) **20.6.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு அ.வ.எண். **100/2017** வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. அசல் வழக்கில் 38/2017 வாதி என்னுடைய அப்பாவின் சகோதரர் என்றால் ஆமாம். தாவா சொத்து வாதியிடம் என்னுடைய தாத்தா ராமசாமி கிரையமாகப் பெற்றது என்றால் தவறு. கூட்டு குடும்ப சொத்து. தாவா சொத்தில் கிரைய ஆவணம் ராமசாமி பெயரில் தனிப்பட்ட முறையில் ஏற்பட்டுள்ளது என்றால் சரி. தாவா சொத்து ராமசாமிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால் தவறு. தாவா சொத்தைப் பொறுத்து ராமசாமி நல்ல மனநிலையிலும் உடல் நிலையிலும் இருந்த சமயத்தில் அவருடைய மனைவிக்கு தான செட்டில்மெண்ட் மூலம் பாத்திய படுத்தி சுவாதீனம் கொடுத்துள்ளார் என்றால் தவறு. தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ராமசாமியின் மனைவி பெற்றுக்கொண்டு ஏற்றுக்கொண்டு சுவாதினம் பெற்று அவர் பெயரில் வருவாய் ஆவணங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு.

2. ராமசாமி தாவா சொத்தில் தனிப்பட்ட முறையில் ராஜேஸ்வரி ப்ளீச்சிங் என்ற நிறுவனத்தை நடத்தி வந்தார் என்றால் ஆமாம். 22.11.2016 ம் தேதி 1ம் பிரதிவாதி அ.வ.எண்.100/2017 வாதி பெயருக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி தாவா சொத்துக்களை சுவாதீனம் கொடுத்துள்ளார் என்றால் தவறு. சரஸ்வதி தாவா 1ம் பிரதிவாதி தயாநிதி பெயருக்கு பிரின்ஸ்

டையிங் பொறுத்து 25.11.2016 ம் தேதி ஒரு வருத்தமான கடிதம் எழுதிக் கொடுத்து சுவாதீனம் கொடுத்துள்ளார் என்றால் தவறு. தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி சுவாதீனம் பெற்ற தயாநிதி அந்த சொத்துக்களில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தி கட்டடங்களைக் கட்டி தனிப்பட்ட முறையில் பராமரித்து வருகிறார் என்றால் தவறு. தான செட்டில் மெண்ட் ஆவணத்தின் படி 22.11.2016 ம் தேதி வருத்தமான கடிதத்தின் படியும் தாவா சொத்து மற்றும் பிரின்ஸ் டையிங் அசையும் சொத்துக்களை பொறுத்து தயாநிதிக்கு தான் முழு உரிமை பாத்தியம் உள்ளது என்றால் தவறு. தாவா சொத்தில் தற்போது தயாநிதி தங்கமண் ப்ராசஸ் என்ற பெயரில் பிரிண்டிங் பிரஸ் நடத்தி வருகிறார் என்றால் இல்லை.

3. அந்தச் சொத்தில் தொழில் செய்வதற்கு அனைத்து உரிமமும் அவர் அரசிடம் இருந்து பெற்று தொழில் செய்து வருகிறார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்களில் அவர் பெயரில் மூன்று மின் இணைப்புகள் பெற்றுள்ளார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை தான செட்டில்மெண்ட் அடிப்படையில் வட்டாட்சியரிடம் இருந்தும் உரிமை சான்று பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு உரிய தொழில் வரி மற்றும் வீட்டு வரி ஆகியவை தயாநிதி செலுத்தி அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் தவறு.

4. தாவா சொத்தை பொறுத்து எனக்கோ இந்த வழக்கில் வாதிக்கோ உரிமையோ பாத்தியமோ இல்லை என்றால் தவறு. நானோ வாதியோ தாவா சொத்தில் தனிப்பட்ட முறையில் எந்த சுவாதீன அனுபவத்திலும் இல்லை என்றால் தவறு உள்ளோம். 8.4.2017 ம் தேதி நானும் இந்த வழக்கு வாதியும் அத்துமீறி தாவா சொத்தின் சுவாதீனத்தை இடங்கள் செய்ததால் தயாநிதி

அசல் வழக்கு எண் 100/2017 தாவாவை தாக்கல் செய்தார் என்றால் தவறு. ராமசாமி தனிப்பட்ட முறையில் நல்ல நினைவுடன் அவர் மனைவி பெயருக்கு ஆவணங்கள் ஏற்படுத்தவில்லை என்று வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கில் 100/2017 வாதிக்கு உரிய தாவா சொத்தில் உரிமையை பறிப்பதற்காக பொய் வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் தவறு.

**அசல் வழக்கு எண். 98/2021 ல் 8 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

முருகம்பாளையம் பொது சுத்திகரிப்பு நிறுவனத்தின் நான் உறுப்பினராக உள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய பெரியப்பா ரத்தினக்குமார் உறுப்பினராக உள்ளார். அதில் நான் ரெண்டு கோடி பணமாக எதுவும் வைப்பீடு செய்யவில்லை என்றால் சரி. 2,20,000/- கன அடி கொண்ட நீரை பொது சுத்தகரிப்புக்கு 8 ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு விடலாம் என்றால் ஆமாம். அதற்கு மாதம் ஒன்றுக்கு 1,21,000/- கட்டணமாக செலுத்த வேண்டும் என்றால் தெரியாது. மாத வாடகை தொகையை செலுத்த நாங்கள் தவறியதால் பொது சுத்திகரிப்பு நிறுவனத்தில் உள்ள எங்களுடைய உரிமை இழந்துவிட்டது என்றால் சரி. எங்கள் குடும்பத்து அங்கத்தினருக்கு இடையே சொத்துக்களை பொறுத்து பிரச்சனை உள்ளது. அதற்கு தேவையில்லாமல் இந்த பிரதிவாதியை தாவாவில் சேர்த்து உள்ளீர்கள் என்றால் சரியல்ல. எங்களுடைய குடும்பத்திற்கு சொந்தமான எந்த ஒரு தொகையும் 8 ம்

பிரதிவாதியிடம் வைப்பீடாகவும் கட்டணமாகவோ இல்லை என்றால் உள்ளது. 8ம் பிரதிவாதியை பொறுத்து அசல் வழக்கு எண்.98/2021 செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.06.20 18:06:08 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.